Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 16, 2022

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 16, 2022 | ஒளி: 08 கதிர்: 166 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பிரபாவின் கட்சி உதயம்



தேர்தல்கள் ஆணைக்குழுவால் அரசியல் கட்சியாக அங்கிகரிக்கப்பட்டுள்ள 'ஜனநாயக மக்கள் காங்கிரஸ்' கட்சியின் அங்குராப்பண நிகழ்வு, சனிக்கிழமை (17) கொழும்பு, சுகததாஸ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது. தொடர்ச்சி P2



# "காரணங்கள் தேவையில்லை"

அரச நிறுவனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை உருவாக்காத வகையில் பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையைப் பெற்றுக் கொடுப்பது அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பாகுமென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் சேவையை நிறைவேற்றத் தவறியமைக்காக அரச உத்தியோகத்தர்கள் ஒருபோதும் காரணங்களை முன்வைக்கக்கூடாதென்றும் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே சட்டங்கள் மற்றும் சட்டக்கோவைகளை கேடயமாகப் பயன்படுத்த வேண்டுமே தவிர நிறுவனங்களில் பணியாற்றுவதற்காக அல்ல என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## "நான் பறங்கி அல்ல; பௌத்த சிங்களப் பெண்"

### கார்டினலுக்கு பதில் வழங்கிய டயானா கமகே

'பறங்கி' என கார்டினல் தன்னையே விமர்சிப்பதாக தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, கார்டினல் கூறுவதுபோல தான் ஒரு பறங்கி அல்ல; பௌத்த சிங்களப் பெண் எனவும் விளக்கமளித்துள்ளார்.

தன்னைப் பறங்கி என விமர்சிக்கும் கார்டினல் போதிக்கும் மதத்தை, பறங்கியர்களே இலங்கைக்கு கொண்டுவந்தார்கள் எனவும் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்த இராஜாங்க அமைச்சர், கார்டினல் தவறாக வழிநடத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 31 முன்னாள் போராளிகளையும் இராணுவ வீரர்களையும் விடுவிக்கவும்



பிரபாகரனுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராகச் செயற்பட்ட குமரன் பத்மநாதன், கருணா அம்மான் போன்றவர்கள் வெளியில் இருக்கிறார்கள். எனவே, தற்போது சிறைச்சாலையில் உள்ள முன்னாள் போராளிகள் 31 பேரை விடுதலை செய்ய வேண்டுமென தெரிவிக்கும் 43ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, சிறைச்சாலையில் உள்ள இராணுவ வீரர்களையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி தலைவர்களுடனான மாநாடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புத்தாண்டில் புதிய கூட்டணி

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கான கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கும் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, கூட்டணி தொடர்பான அறிவிப்பு வெளியாகும் நாளில் எம்மோடு யார் இருக்கிறார்கள் என்பது தெரியவரும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## 180 கிலோ கிராம் கஞ்சா குருநகரில் சிக்கியது

நிதர்ஷன் வினோத்

இந்தியாவில் இருந்து கடல்வழியாக கடத்தி வரப்பட்ட 180 கிலோ கிராமுக்கு மேற்பட்ட கஞ்சா, யாழ். குருநகர்ப் பகுதியில் வைத்து கடற்படையினரால் வியாழக்கிழமை (15) கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்தி வரப்பட்ட கஞ்சாவே கடலில் வைத்து கைப்பற்றப்பட்டது. கஞ்சாவை எடுத்து வந்த ஒருவரை கைது செய்துள்ள இலங்கை கடற்படையினர், படகையும் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## கடன்களை தவிர்ந்து உற்பத்தி திறனை மேம்படுத்த வேண்டும்

### பிரதமர் தினேஷ் குணவர்தன

உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமே எதிர்கால சந்ததியினருக்கான நம்பகரமானதொரு வழியை உருவாக்க முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று (15) நடைபெற்ற 'தேசிய உற்பத்தித்திறன் விருது' வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## தலைமன்னார் துறைமுகத்தில் இருபக்க ஆய்வு செய்யவும்

### செந்திலுக்கு ஜனாதிபதி பணிப்பு

தலைமன்னார் துறைமுகத்தை தொழில்துறைமுகமாக மாற்றத் தேவையான இருபக்க ஆய்வை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2



மார்ச், ஏப்ரல் மாதங்களில்

## நாடு இருளில் மூழ்கக்கூடும்

நிலக்கரி தட்டுப்பாட்டால் அடுத்த ஆண்டின் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கக்கூடும் என மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த நிலைமை குறித்து தொடர்ச்சியாக எச்சரித்தும் அரசாங்கம் இதற்கான மாற்று வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று (15) ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் மேலும் கூறுகையில், மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய நீர் மட்டம் 75 சதவீதம் என கணிப்பிடப்பட்டுள்ளது. எனினும், கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்தமையால் எதிர்காலத்தில் நீர் மட்டம் குறைவடைவதற்கான ஏதுநிலைகள் உள்ளன. இதனால் மின்சார தட்டுப்பாடு ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

தற்போது, நிலக்கரியை தாங்கிய 5 ஆவது கப்பலே நாட்டை வந்தடைந்துள்ளது.

தொடர்ச்சி P2



## வடக்கு, கிழக்கில் இறந்த கால்நடைகளுக்கு நட்டஈடு

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அதிகுளிருடன் கூடிய வானிலையால், வடக்கு, கிழக்கில் பெரும் தொகையான கால்நடைகள் இறந்தன.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இறந்த கால்நடைகளுக்காக நட்டஈட்டை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்தால், இறந்த கால்நடைகளுக்காக நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1,800 இற்கும் அதிகமான கால்நடைகள் இறந்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம்

## வெளிப்படையாக செயற்பட வேண்டும்

இலங்கை எதிர்கொண்டுவரும் நெருக்கடி நிலைமைகளை வெற்றிகொள்ள சகல கட்சிகளினதும் மக்களினதும் சிவில் பிரதிநிதிகளினதும் குரலுக்கு செவிமடுக்க வேண்டும் என்பதையும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதன் மூலமாகவே சவால்களை வெற்றிகொள்ள முடியும் என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று (15) எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ச்சி P2



## த.தே.கூவை அரசியலமைப்பு பேரவைக்கு அழையுங்கள்

அரசியலமைப்பு பேரவைக்கு நியமிக்கப்பட வேண்டிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தை உடனடியாக வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்தார்.

பன்முகத்தன்மையின் அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்துவதற்கு தான் ஒருபோதும் உடன்பாடில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு-கிழக்கு சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களை வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

கடனை மீளச் செலுத்தக்கூடிய

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன்



நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நிச்சயமாக பாடுபடுவேன் என வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடன் சுமையற்ற மற்றும் கடனை மீளச் செலுத்தக்கூடிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன் என்றும் வலியுறுத்தினார்.

இலங்கை-ஜப்பான் உறவுகளின் 70 வருட பூர்த்தியை முன்னிட்டு டொயோட்டா லங்கா நிறுவனத்தால் கடவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட மோட்டார் உதிரிப் பாகங்கள் விநியோக நிலையத்தை நேற்று முன்தினம் (14) திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடியதும் நாட்டுக்கு முதலீட்டு வாய்ப்புகளை கொண்டு வரக்கூடியதுமான நிறுவனக் கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை முதலீட்டு சபையின் முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவை, ஏற்றுமதி மேம்பாட்டு சபையுடன் இணைத்து, பொருளாதார கூட்டுத்தாபனமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று வியட்நாம் 25 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீட்டைப் பெற்றுள்ளது. இவர்களுக்கு வழிகாட்டுதலை வழங்கிய இலங்கைக்கு இவ்வருடம் ஒரு பில்லியன் டொலரே கிடைத்துள்ளது. 2018 இல் அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றோம். அது 1.6 பில்லியன் தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நான் பறங்கியர்...



சூதாட்ட விடுதிகள், கஞ்சா தொடர்பில் நானே பேசி வருகிறேன். இவ்வாறான நிலையில், "பறங்கியர் கூறுவதைக் கேட்டு செயற்பட முடியாது" என கார்டினல் கூறியிருக்கிறார். கார்டினல் என்னைப் பற்றியே பேசியிருக்கிறார். போர்த்துக்கேயரையே 'பறங்கியர்' என நாட்டில் விழிக்கிறார்கள்.

கார்டினல் போதிக்கும் கத்தோலிக்க

**அபின் என்கிற போதைப்பொருளை நாட்டுக்குக் கொண்டுவந்ததும் போர்த்துக்கேயர்தான். சீனாவுக்கும் இந்தப் போதைப்பொருளை அவர்களே கொண்டு சென்றனர் கஞ்சாவால் பௌத்த மதத்துக்கு எந்தவிதமானப் பாதிப்புகளும் இல்லை. புத்தப்பெருமான் கூட மருந்தாக கஞ்சாவை பயன்படுத்தியிருக்கிறார். வரலாற்றில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வரலாற்றுக்கும் பௌத்தத்துக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் இதனால் இல்லை**

மதத்தை பறங்கியரே இலங்கைக்குக் கொண்டுவந்தனர். அப்படியென்றால் பறங்கியர்கள் நல்லவர்களாகவே இருக்க வேண்டுமே! இவ்வாறான நிலையில் பறங்கியர் தொடர்பில் கார்டினல் எவ்வாறு விமர்சிக்க முடியும்.

போதைப்பொருள் தொடர்பில் கார்டினல் பேசியிருக்கிறார். அபின் என்கிற போதைப்பொருளை நாட்டுக்குக் கொண்டுவந்ததும் அவர்கள்தான். சீனாவுக்கும் இந்தப் போதைப்பொருளை அவர்களே கொண்டு சென்றனர். இந்த விடயத்தில் கார்டினலை எவரோ தவறாக வழிநடத்தியிருக்கிறார்கள்

கஞ்சாவால் பௌத்த மதத்துக்கு எந்தவிதமானப் பாதிப்புகளும் இல்லை. புத்தப்பெருமான் கூட மருந்தாக கஞ்சாவை பயன்படுத்தியிருக்கிறார். வரலாற்றில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வரலாற்றுக்கும் பௌத்தத்துக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் இதனால் இல்லை. என்னை பறங்கியர் என கார்டினல் கூறுவராக இருந்தால் தெற்கில் உள்ள பௌத்த சிங்கள குடும்பத்திலிருந்தே நான் வந்திருக்கிறேன் எனவும் விளக்கமளித்தார்.

# “காரணங்கள் தேவையில்லை”

பதுளை மாவட்டச் செயலகத்தில் வியாழக்கிழமை (15) முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

இப்பகுதிகளில் உள்ள பைனஸ் மரங்களை அகற்றுவதற்கு முன்னர் அது தொடர்பிலான விஞ்ஞானபூர்வமான அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். ஆங்கிலேயர்கள் இந்நாட்டை ஆட்சி செய்த காலத்தில், பைனஸ் பயிர்ச்செய்கை இருக்கும்போதே தான் தேயிலையையும் பயிரிட்டனர்.

எனவே தவறான கருத்துகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள். இதனால் பைனஸ் பயிர்ச்செய்கையை அகற்றுவதற்கு முன்னர் இது நீரேந்துப் பிரதேசங்களைப் பாதிக்கிறதா என்பது தொடர்பில் விஞ்ஞானபூர்வமாக ஆராய்தல் வேண்டும். பைனஸ் பயிர்ச்செய்கையை நீக்கிவிட்டு டர்பன்டைன் பயிர்ச்செய்கையில் எதற்காக ஈடுபட்டீர்கள். டர்பைன்டைன் பயிர்ச்செய்கைக் காரணமாக நீரேந்துப் பிரதேசங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால் அப்பயிர்ச்செய்கையை நீக்கிவிடுங்கள்.

அரச அதிகாரிகள் திறமையாக செயற்பட வேண்டும். எனக்கு காரணங்கள் தேவையில்லை. அரச திணைக்களங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட வழியில்லை. அரசாங்கம் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

பெருந்தோட்டத் துறையில் சில அதிகாரிகள் சட்டக் கோவைகளை கேடயமாக வைத்துக்கொண்டு செயற்படுகின்றனர். 80 களில் இந்தச் சட்டத்தை தயாரிக்கும் போது இது குறித்து நான் கவனம் செலுத்தினேன். இப்பிரதேசத்திலுள்ள கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியபோது, ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக குறிப்பிடப்பட்டது. ஆசிரியர் நியமனங்களைப் பெற்று, ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே நியமனம் பெற்று ஐந்து வருடங்களுக்கு இடமாற்றங்களை வழங்காமை தொடர்பில் கல்வியமைச்சும் மாகாண சபையும் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு புதிய காணிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டு அதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பதுளை மாவட்டத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக மஹியங்கனை பிரதேச வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக மாற்றுவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும். அதேபோன்று, கிராதுருக்கோட்டையில் உள்ள சிறுநீரக மருத்துவமனையின் செலவுக்காக நிதியை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். தியத்தலாவை ஆதார வைத்தியசாலை காரணமாக பண்டாரவளை வைத்தியசாலையின் அபிவிருத்தியில் பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் நாம் ஆராய்வோம். பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக மாற்றுவதற்கான பணிகள் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் இவ்விடயம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பிரபாவின் கட்சி உதயம்

முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசனின் தலைமையிலான இக்கட்சிக்கு 'தபால்பெட்டி' சின்னம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலவருட செயற்பாடுகளுக்கு மத்தியில் அரசியல் கட்சியாக அங்கிகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 31 முன்னாள் போராளிகளையும் ...

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சர்வகட்சி தலைவர்கள் மாநாட்டில் இராணுவத்தின் வசமுள்ள காணிகள் விடுக்கப்பட வேண்டும்; சிறைச்சாலைகளில் உள்ள முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்; காணாமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பபட்டுள்ளன.

மேலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களாகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் அந்த இயக்கத்துக்கு தலைமை ஏற்றிருந்த குமரன் பத்மநாதன் வெளியில் இருக்கிறார். ராமன், நகுல், கருணா போன்றவர்களும் வெளியில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் சிறைச்சாலையில் உள்ள 31 முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும்.

அதேபோல் இராணுவத்தினரையும் விடுதலை செய்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். மேலும் அரசியலமைப்பு தொடர்பில் இதன்போது பேசப்பட்டது. அது தொடர்பில் பாராளுமன்றத்துக்குள்ளேயே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

பொருளாதாரப் பிரச்சினையால் கஸ்டத்தில் உள்ள தமிழர்கள் படகுமூலம் இந்தியாவுக்கு தப்பிச் செல்கிறார்கள். கஸ்டத்தில் உள்ள சிங்களவர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்கிறார்கள். பணமுள்ளவர்கள் விமானங்கள் மூலம் வேறு நாடுகளுக்கு செல்கிறார்கள். எனவே, பொருளாதாரப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மேலும், தேர்தல் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. சர்வக்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் எந்தவிதமான இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை. மீண்டும் ஜனவரி மாதம் சர்வக்கட்சிக் கூட்டம் நடைபெறும் என்றார்.

## தலைமன்னார் துறைமுகத்தில் இருபக்க ஆய்வு செய்யவும்



இலங்கையில் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தபட்டு வருகின்ற நிலையில், அது தொடர்பான கூட்டம் ஜனாதிபதி தலைமையில் பதுளையில் மாவட்டத்தில் வியாழக்கிழமை (15) இடம்பெற்றது.

இதன் போது பதுளை மாவட்டத்தில் புயலால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

**தலைமன்னார் துறைமுகத்தை தொழில்துறைமுகமாக மாற்ற இலங்கையும் இந்தியாவும் கலந்துரையாடவும்**

இக்கூட்டத்தின் பின்னர் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானிடம் ஜனாதிபதி, தலைமன்னார் துறைமுகத்தை தொழில்துறைமுகமாக மாற்ற இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு தரப்பினரும் கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

## பொருளாதாரத்தை கட்டியெழுப்புவேன்

இலங்கைக்கு இவ்வருடம் ஒரு பில்லியன் டொலரே கிடைத்துள்ளது. 2018 இல் அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றோம். அது 1.6 பில்லியன் டொலராகும். அன்று சுற்றுலா குறித்து வழிகாட்டுதலை வழங்கிய வியட்நாம், 2018 இல் சுற்றுலா மூலம் 26 பில்லியன் டொலர் வருமானத்தைப் பெற்றுள்ளது. எங்களுக்கு 4.6 பில்லியன் டொலர் மட்டுமே கிடைத்தது. நாம் வியட்நாமைப் போல் வளர்ச்சி அடைந்திருந்தால், நாம் அனைவரும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருப்போம்.

இன்று வியட்நாமின் பொருளாதாரம் 'போர்மியுலா வன்' பந்தயக் கார் போல் உள்ளது. நமது பொருளாதாரம் இன்னும் ஓட்டோ போல் உள்ளது. அப்படி இருப்பின் நாம் எப்படி சிங்கப்பூர் ஓட்டப் பந்தயத்திற்கு செல்வது? மற்ற நாடுகளுக்கு 'போர்மியுலா வன்' பந்தயக் கார்கள் உள்ளன. நாங்கள் ஓட்டோவில் சென்று போட்டியிடலாமா? மக்கள் தினமும் பயணம் செய்வதற்கே இது நல்லது. அதில் எந்த பிரச்சினையும் இல்லை. இது நன்றாக இருக்கிறது என்று மீண்டும் சொல்கிறேன். ஆனால் பந்தயத்திற்கு அது பொருந்தாது. நாம் எப்படி வெல்வது? அவ்வாறென்றால் நாம் ஒரு பந்தயக் காரைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு நல்ல இயந்திரம் இருக்க வேண்டும். அதாவது நல்ல பொருளாதாரம். அதுதான் இப்போது நாம் கட்டியெழுப்பும் பொருளாதாரம் எனவும் தெரிவித்தார்.

## கடன்களை தவிர்ந்து...

உற்பத்தித்திறன் எமக்கு சவாலாக உள்ளது. ஒரு நாட்டின் அபிவிருத்தியின் அடுத்த கட்டத்தைப் போன்று, உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்டே எதிர்கால சந்ததியினருக்கான நம்பகரமான வழியை உருவாக்க முடியும். எமது நாட்டின் உற்பத்தித் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க வேண்டும். அந்தச் சவாலை வெற்றிகொள்வதில் முன்னுரிமைப்படுத்த வேண்டிய விடயங்களை அடையாளம் காண்பது முக்கியமானதாகும்.

புதிய தலைமுறை இளைஞர்களின் படைப்பாற்றலுக்கு நாம் இடமளிக்க வேண்டும். இந்த மாற்றத்தின் மூலம் புதிய விடயங்களை உருவாக்க சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாரம்பரிய கோணத்தில் இருந்து விலகி சமூகத்தையும் நாட்டையும் புதிய யுகத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கும் மக்களின் உற்பத்தித்திறனை அங்கிகரித்து இவ்வாறு கௌரவிப்பது ஒரு சிறந்த நடைமுறையாகும்.

உற்பத்தித்திறனை பாதிக்கும் அரச நிறுவன மற்றும் நிதி ஒழுங்கு விதிகளை மீளாய்வு செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். அவ்வாறு செய்யவில்லையென்றால், அது காலத்தை விரயம் செய்யும் செயற்பாடாகவே இருக்கும். கிராம மட்டத்தில் இருந்தே நாட்டை மேல் நிலைக்கு கொண்டுவரும் பணியில் ஒவ்வொரு துறையும் மாற்றப்பட வேண்டும். சில நிறுவனங்களுக்கு திறைசேரியில் இருந்து நிதி ஒதுக்கப்படுகிறது. இது பொதுமக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த நிறுவனங்களின் மூலம் தேசிய செல்வத்திற்கு எதுவும் சேர்க்கப்படுவதில்லை. இவ்வாறு உற்பத்தித்திறனற்ற பல அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளன.

இனிவரும் காலங்களில் பல்வேறு துறைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அந்த மாற்றங்களின் அடிப்படையில் நாங்கள் புதிய சாதனைகளை அடைய வழி வகுக்கவேண்டியவர்கள் நீங்கள். பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியாமல், உற்பத்தித் திறன் இல்லாமலேயே எமது நாட்டில் பெரும் மூலதனம் செலவிடப்படுகிறது. சூரிய ஒளி அல்லது மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டது. எமது அயல் நாட்டில் ரயில்கள் மற்றும் ஓட்டோக்கள் மின்சாரத்தில் இயங்குகின்றன. வீண் செலவுகளுக்காக கடன்படுவதற்கு பதிலாக, நாமும் அப்படிப்பட்ட நிலைக்கு எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## புத்தாண்டில் புதிய கூட்டணி

அநுராதபுரத்தின் ஜெய ஸ்ரீ மகா போதியில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார்.

**நல்லாட்சி அரசாங்கத்தில் நானும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் இணைந்து செயற்பட தீர்மானித்தோம். அப்போது எனக்கு ஜனாதிபதி பதவியும் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதிவியும் கிடைத்தன. எனக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். என்னை அவமதித்தார்கள். என்னை அவமதித்து எனக்கு எதிராக சேறுபூசியவர்களுக்கு இப்போது ஜனாதிபதி பதவியும் இல்லை பிரதமர் பதவியும் இல்லை**

நல்லாட்சி அரசாங்கத்தில் நானும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் இணைந்து செயற்பட தீர்மானித்தோம். அப்போது எனக்கு ஜனாதிபதி பதவியும் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதிவியும் கிடைத்தன. எனக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். என்னை அவமதித்தார்கள். என்னை அவமதித்து எனக்கு எதிராக சேறுபூசியவர்களுக்கு இப்போது ஜனாதிபதி பதவியும் இல்லை பிரதமர் பதவியும் இல்லை என்றார்.

கூட்டணி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் நாளில் எம்மோடு யார் இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிந்துகொள்வார்கள்.

எமது கட்சியை விட்டுச் சிலர் சென்றுவிட்டார்கள் என விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது. எமது கட்சிக்குள் எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படவில்லை. கட்சியில் ஏற்பட்டிருந்த வெற்றிடங்களுக்கு திறமையான, அறிவார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்சியைப் பலப்படுத்தும் வேலைகளையே தற்போது செய்து வருகிறோம். ஜனவரி முதல் மக்களுக்கு எமது புதிய வேலைத்திட்டங்களை அறிவிக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## வெளிப்படையாக செயற்பட வேண்டும்

இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைவரங்கள் குறித்தும், பிரதான எதிர்க்கட்சியின் பொது வேலைத்திட்டங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக தற்போது இலங்கை எதிர்கொண்டுவரும் நெருக்கடி நிலைமைகளை வெற்றிகொள்ள சகல கட்சிகளினதும், மக்களினதும், சிவில் பிரதிநிதிகளினதும் குரலுக்கு செவிமடுக்க வேண்டும் என்பதையும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதன் மூலமாகவே சவால்களை வெற்றிகொள்ள முடியும் என்பதையும் எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், அரசாங்கம் வெளிப்படையாக செயற்பட வேண்டும் எனவும், மக்களின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். நாட்டின் ஜனநாயகம் வலுப்பெற வேண்டும் எனவும், சகல மக்களினதும் கருத்துகளுக்கு இடமளித்து ஜனநாயக ரீதியில் முன்னகர வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க தூதுவர், நெருக்கடி நிலைமைகளில் இலங்கைக்கு முழுமையான ஆதரவை தாம் வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**அரசாங்கம் வெளிப்படையாக செயற்பட வேண்டும். மக்களின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நாட்டின் ஜனநாயகம் வலுப்பெற வேண்டும். சகல மக்களினதும் கருத்துகளுக்கு இடமளித்து ஜனநாயக ரீதியில் முன்னகர வேண்டும் எனவும் நெருக்கடி நிலைமைகளில் இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்கி வருவதாகவும் அமெரிக்க தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

## 180 கிலோ கிராம்...



இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கஞ்சாவை கடத்தி வந்தவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## நாடு இருளில் மூழ்கக்கூடும்




அது நிறைவடைந்தால் அடுத்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கக்கூடும். மார்ச், ஏப்ரல் இருட்டு மாதங்களாக மாறக்கூடும். நிலக்கரி இறக்குமதி செய்யாது மின் உற்பத்தியை செய்ய முடியாது. நட்டம் என கூறிக்கொண்டு மின் உற்பத்தி நிலையங்களை விற்கும் முயற்சியே இவையாகும். தற்போதைய நிலையில் நிலக்கரியுடனான 24 கப்பல்கள் நாட்டை வந்தடைந்திருக்க வேண்டும். எனினும், அதனை அரசாங்கம் தவறவிட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் கடும் மின்சார நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும். 24 மணிநேர மின்வெட்டு ஏற்படும் அச்சுறுத்தல் உள்ளது. தற்போது எரிபொருளும் இல்லாது, நிலக்கரியும் இல்லாது தீர்வுகளை வழங்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை காலந்தாழ்த்த முயற்சித்தவர்கள்

# 13ஐ பற்றி பேசுவது நகைப்புக்குரியது

நாட்டில் தேர்தலைக் காலந்தாழ்த்த முயற்சித்தவர்கள் தற்போது 13ஆவது திருத்த சட்டம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியதென தெரிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, மின்சாரம், எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறைத்திருந்தாலும், போராட்டம் மூலமாக மக்கள் அவரை விரட்டியடித்தார்கள் எனவும் தெரிவித்தார். நாட்டில் தேர்தல் நிச்சியமாக நடத்தப்பட வேண்டும். ஆனால் அன்று மாகாணசபைத் தேர்தலைக் காலந்தாழ்த்துவதற்காக செயற்பட்டவர்கள் இன்று அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியது எனவும் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டம், தேர்தல்கள் தொடர்பில் அவர்களுக்கு அக்கறை இருந்தால் கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு அவர்கள் தேர்தலைக் காலந்தாழ்த்தியிருக்க மாட்டார்கள். நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அது தொடர்பான நீண்ட கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளது என்பதே எமது நிலைப்பாடு. மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தார் என்பதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதுவும் கிடைக்கவில்லை. மின்சாரம், எரிபொருள், எரிவாயு என்பனவற்றை குறைந்த விலைக்கு வழங்கினார். ஆனால் இறுதியில் போராட்டம் நடத்தி அவரை விரட்டியடித்தது



மட்டுமே நடந்துள்ளது. இலங்கை மின்சார சபையை பாதுகாக்க வேண்டுமென்கிற நிலைப்பாட்டில் பலர் இருக்கிறார்கள். அவ்வாறு பாதுகாப்பதாக இருந்தால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு எனவும் தெரிவித்தார். மின்சாரக் கட்டணம் அதிகரிக்குமாக இருந்தால் குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்கள், மத வணக்கஸ்தலங்கள் ஆகியவற்றுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் எனவும் நாமல் கேட்டுக்கொண்டார்.

கல்வி முறைமை

# மறுசீரமைக்கப்பட வேண்டும்



இலங்கையின் கல்வி முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், கல்வி மறுசீரமைப்புக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட வேண்டும் என தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜோசப் ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பது உண்மை. ஆனால் அதனை எவரும் செய்வதில்லை. கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கொண்டுவந்த யோசனைகளுக்கு என்ன நடந்தது? 1939ஆம் ஆண்டு முதல் கல்விச் சட்டங்கள் தொடர்பில் பேசப்பட்டு 2015ஆம் ஆண்டு அதனை சமர்ப்பித்திருந்தார்கள். இவை அனைத்தும் செயற்படவே இல்லை என்றார்.

அனைத்து மறுசீரமைப்புகளும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலேயே தற்போதும் மறுசீரமைப்பு தொடர்பில் பேசப்படுகிறது. தற்போதைய மறுசீரமைப்பு தொடர்பான திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி எங்கே இருக்கிறது? இதுவே எமக்குள்ள பிரச்சினை எனவும் தெரிவித்தார். கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்வதாக இருந்தால் வெளிப்படைத்தன்மையுடன் அவற்றை மேற்கொள்ள வேண்டும். தேசிய கல்வி ஆணைக்குழு கல்வி தொடர்பான மாநாடு ஒன்றை நடத்த உள்ளது. இதற்கும் கல்வி மறுசீரமைப்புக்கும் உள்ள தொடர்புகள் என்ன? இது தொடர்பில் எமக்கு விளக்கம் இல்லாத நிலையே ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு தெளிவான பதில்கள் இல்லை எனவும் தெரிவித்தார். கல்வி மறுசீரமைப்புகள் நாட்டில் உள்ள 43 இலட்ச மாணவர்களுக்காகவே மேற்கொள்ளப்படுகிறது என்றால், முதலில் அவர்கள் உண்பதற்கு உணவு வேண்டும். புத்தகங்கள் வேண்டும். சீருடை வழங்க வேண்டும். இது தொடர்பில் தெளிவான நடவடிக்கைகள் இல்லை எனவும் தெரிவித்தார்.






## தொட்டி மீன்களுக்கு விருது...

அஜன்டா 14 குறும்பட விருது வழங்கும் விழாவில் இலங்கையின் முன்னணி இயக்குனர் நடராஜா மணிவண்ணனின் இயக்கத்தில் வெளியான "தொட்டி மீன்கள்" குறும்படம் இந்த ஆண்டுக்கான சிறந்த குறும்படத்துக்கான விருதைப் பெற்றுள்ளது. இப்படத்தில் நடித்த அரண்யாவுக்கு சிறந்த குழந்தை நட்சத்திரம் விருதும் கிடைத்துள்ளது...

# யானை – மொட்டுக் கூட்டணி சாத்தியமில்லை

ரஞ்சித் ராஜபக்ஷ



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் தேசிய மட்டத்தில் கூட்டணிகளை அமைத்தாலும் கீழ் மட்டத்தில் அது சாத்தியமில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற்பீட உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாவலப்பிட்டிய கரஹதுன்கல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலுக்குக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியை தேசிய மட்டத்தில் அமைத்தாலும் கீழ் மட்டத்தில் அது சாத்தியமில்லை எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டில் 69 இலட்ச மக்களின் வாக்குகளைப் பெற்றிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சியோடு கூட்டணி அமைக்க தீர்மானித்திருப்பது தங்களுக்கிருந்த 69 இலட்ச வாக்குகள் இல்லாமல்போயுள்ளதை புரிந்துகொண்டதாலேயே எனவும் கூறினார்.

தேர்தல் நடத்தப்படுமென கூறினாலும் எப்போது தேர்தல் நடத்தப்படுமென சரியாக கூற முடியாது. இந்நாட்டில் அதிக சம்பளத்தைப் பெறும் அரச துறையின் உயர் அதிகாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள கலந்துரையாடி வருகிறார்கள். அந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால் நாட்டு மக்களுக்கு அதனால் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் கூறினார்.

# இலங்கை விமானப்படைத் தளபதியை சந்தித்தார் இந்திய கடற்படைத் தளபதி

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரி குமார் மற்றும் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் (14) விமானப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது, இந்திய கடற்படை தளபதிக்கு இலங்கை விமானப்படையினரின் வர்ண அணிவகுப்பு படை பிரிவினரால் அணிவகுப்பு மரியாதை வழங்கி வரவேற்கப்பட்டது

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவப் பயிற்சி மற்றும் பிராந்திய கடல்சார் பாதுகாப்பு தொடர்பாக சிநேகபூர்வ கலந்துரையாடலும் நடைபெற்றது.



இறுதியாக இந்த நிகழ்வை நினைவு கூறும் வகையில் இருவருக்கும் இடையிலான நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

மேலும் இந்த சந்திப்பில் இலங்கை விமானப்படையின் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்

ஐ.நா வதிவிடப் பிரதிநிதி

# ஹனா சிங்கர் ரிஷாட் எம்.பி சந்திப்பு



ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனுக்குமிடையிலான சந்திப்பு கடந்த 13 ஆம் திகதி இலங்கைக்கான ஐ.நா தூதரகத்தில் இடம்பெற்றது. இதன்போது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் அவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான வழிவகைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், சர்வதேச முகவராண்மைகளின் ஆதரவுடன் முன்னோக்கி செல்லும்

> "தனது சேவைக்காலத்தை நிறைவு செய்யவுள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார் ரிஷாத் பதியுதீன்

முறைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதேவேளை, ஐ.நா வதிவிடப் பிரதிநிதி இலங்கைக்கு ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நன்றியினை தெரிவித்த ரிஷாட் எம்.பி, தனது சேவைக்காலத்தை நிறைவு செய்யவுள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

# நீதி அமைச்சரை சந்தித்தார் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர்

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ. ஷால்க்குக்கும் இடையேயான சந்திப்பு நேற்று (15) இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதேவேளை, இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட சர்வதேச ஆதரவு கையகப்படுத்துதல் மற்றும் இந்நாட்டின் சட்ட அமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து



கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளை நாட்டில் பாதுகாப்பதை மேலும் வலுப்படுத்த ஆணைக்குழுவைப் பலப்படுத்துவதற்கும், இந்நாட்டின் சட்ட அமைப்பைச் சீர்திருத்துவதற்கும் தேவையான ஆதரவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின்

# வன்முறைகளுக்கு பின்னால் ஜே.வி.பி

தங்களது பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் என்ன செய்துகொ ண்டிருக்கிறார்கள் என்பதை பெற்றோர்கள் தேடிப்பார்க்க வேண்டும் என தெரிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத், பல்கலைக்கழக மாணவர்கள் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஜே.வி.பி, சோசலிஷ முன்னணி ஆகிய கட்சிகளே காரணம் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். நாட்டின் இளைஞர்கள் மத்தியில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலைக்கு இன்று போதைப்பொருள் வந்துள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரை



தாக்கியவர்கள் போதைப்பொ ருளைப் பயன்படுத்தியிருந்தார்கள் என நான் கூறவில்லை. ஆனால், பல்லைக்கழகங்களில் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடும் நிலைக்கு இளைய தலைமுறையினர் வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு சில தீர்வுகளை வழங்கக்கூடிய வரவு செலவு திட்டத்தையே ஜனாதிபதி முன்வைத்துள்ளார் என நாம் நம்புகிறோம் எனவும் தெரிவித்தார்.

போதைப்பொருளைத் தேட

# மாணவர்களின் புத்தகப்பைகள் சோதனை

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பொலிஸார் போதைப்பொருளை தடுப்பதற்காக விசேட நடவடிக்கையாக, பாடசாலை மாணவர்களை நேற்று வியாழக்கிழமை (15) சோதனைக்கு உட்படுத்தினார்கள்.

புனித மைக்கல் ஆண்கள் தேசிய பாடசாலையில் மோப்பநாய்கள் சகிதம் மாணவர்களின் புத்தகப்பைகளைச் சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ராஜித ஸ்ரீ தமிந்த ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.கே.பி ஹட்டியாராச்சி தலைமையில் நேற்று காலை 6.30 மணிக்கு, புனித மைக்கல் பாடசாலையின் வாசலில், சோதனை நடவடிக்கையில்



ஈடுபட்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை, ஏனைய பாடசாலைகளிலும் தொடரும் எனவும் மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோர் போதைப்பொருள் வியாபாரிகள், பாவிப்பவர்கள் தொடர்பாக அறிந்திருந்தால், உடனடியாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறியத்தருமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டது

# சம்பந்தனுக்கு எப்படித் தெரியும்?

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

■ க. அகரன்

யுத்தம் முடிவடைந்த காலத்தில், தமிழர்களை கொல்ல பெரும்பான்மை இனத்தவர்களுக்கு சம்பந்தன் அனுமதி கொடுத்தாரா, சம்பந்தன் போர் குற்றவாளியா என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் நேற்று (15) ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ் பிள்ளைகளை



கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றவும் தமிழ்த் தேசத்தின் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளைப் பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2,126ஆவது நாள் இன்றாகும்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டதாக சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் அனைவரும் கொல்லப்பட்டது சம்பந்தனுக்கு எப்படி தெரியும்? அவர் அதை நம்பினால், ஆதாரம் மற்றும் நேரில் கண்ட சாட்சிகளை எமக்குக் காட்டவேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, சர்வதேச விசாரணையை விரும்பாததற்குக் காரணம், அது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களில் குற்றவாளியாக்கும் என்பதாலேயே ஆகும் என்றார்





# அண்ணாவிமார் மாநாடு

கூத்துக் கலை அண்ணாவிமார்களுக்கான மாநாடு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை (14) மட்டக்களப்பு, பிள்ளையாரடி, தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்தும் விசேட அதிதிகளாக உதவி அரசாங்க அதிபர் ஆ. நவேஸ்வரன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச. நேசராஜா ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி இ.இராகுலநாயகியும் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் சி. சுதாகரும் கௌரவ அதிதிகளாக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடியும் கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.பவளகாந்தனும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி, பேராசிரியர் சி. மௌனகுரு, கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பிரிவின் முன்னாள் மேலாளர் பாலசுகுமார், அண்ணாவியார் தலைக்கூத்தர் கு. பொன்னம்பலம் ஆகியோரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

இந்நிகழ்வில், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தங்கராசா மலர்ச்செல்வனின் தொகுப்பில் உருவான 'தெய்' நூல் வெளியீடும் இடம்பெற்றது.

எம்.எஸ்.எம் நூர்தீன்



பொருளாதார வீழ்ச்சிக்கு பெரும் பங்கு...

# சிறப்பு பட்டிமன்றம்

■ அ. அச்சுதன்

திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் பிரதம நூலகர் க .வரதகுமார் தலைமையில், நேற்று (15) நூலக கேட்போர்கூடத்தில் சிறப்புப் பட்டிமன்றமும் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது.

நிகழ்வில், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் அரசியல்வாதிகள் எனவும் மறுதரப்புவாதமாக அரசியல்வாதி அல்ல எனவும் வாதிட, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் பங்கெடுத்திருந்தனர்.

நடுவர்களாக திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் வெ. இராஜசேகர், அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா, திருகோணமலை நீதிமன்ற சட்டத்தரணி சி.ஐஸ்வர்யா இவர்களோடு நிகழ்வின் வளவாளராக நீதிமன்ற முதலியார் எஸ். கமலும் கலந்து சிறப்பித்தார்கள்.



# உலர் உணவு பொதிகள்

■ மட்டு. துஷாரா

'இலங்கை காப்போம்' தொண்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு, உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) குறித்த நிறுவனத்தின் மட்டிக்களி கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

'இலங்கை காப்போம்' தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு. பிரதிப்கரன் (திலீப்) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சித்த ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் மா. நிரஞ்சன் கலந்து கொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

இதன்போது, செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர்களின் 50 குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.



கனகர்கிராமம்:

## காணிகளை பகிர்ந்தளிக்கும் ஆரம்ப நடவடிக்கைகள்

■ திருக்கோவில் எஸ் கார்த்திகேசு

பொத்துவில், ஊரணி, கனகர்கிராமம் காணி கோரிக்கையாளர்களில் 76 குடும்பங்களுக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நேற்று (15) பொத்துவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ். பிரனாஸ் ஒழுங்கமைப்பில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. டி வீரசிங்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனும் கலந்து கொண்டு இருந்தார்.

இதனடிப்படையில், ஒரு குடும்பத்துக்கு குடியிருப்புக்காக 20 பேர்ச் காணியும் விவசாய நடவடிக்கைகளுக்கான ஓர் ஏக்கர் காணியும் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதுடன் திருவுளச்சீட்டு முறையில் காணிகளின் தெரிவுகள் இடம்பெற்று இருந்தன.




வாள்வெட்டு காடையர்கள்

## அம்புலன்ஸ் மீதும் தாக்குதல்

■ நிதர்சன் வினோத்

பருத்தித்துறை, அல்வாய் வடக்கு பகுதியில் இரண்டு வன்முறை கும்பல்களுக்கிடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் காயமடைந்தவர்களை ஏற்றச் சென்ற அம்புலன்ஸ் வண்டி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், உயிர்காப்பு பணியாளர்களும் அச்சுறுத்தப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இரு வன்முறை கும்பல்களுக்கிடையில் வாள்வெட்டு மோதல் இடம்பெற்றுள்ளது. இதில் பலர் காயமடைந்த தகவல் வழங்கப்பட்ட நிலையில், 1990 அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்குச் சென்று காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றுள்ளது.

இதன்போது அம்புலன்ஸ் வண்டியை வழிமறித்த காடையர்கள், அம்புலன்ஸ் வண்டி மீது தாக்குதல் நடத்தியதுடன், பணியாளர்களை அச்சுறுத்தியுள்ளனர். எனினும், அம்புலன்ஸ் அங்கிருந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்கு சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால்

## உலருணவுப் பொதிகள் விநியோகம்



■ நிதர்சன் வினோத்

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழுகின்ற பொருளாதார ரீதியாக நலிவுற்றிருக்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 100 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் (14) உலருணவுப் பொதிகளை நாவாந்துறை, பழம் வீதி ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை அமரர் பொ. பரமேஸ்வரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது பிள்ளைகள் வழங்கியிருந்தனர். இந்நிகழ்ச்சியில் திருமதி பராசக்தி பரமேஸ்வரன் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

# 'இலங்கை வங்கி விருது'




■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தால் வழங்கப்படும் தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி ஆகிய இரண்டு பட்டப் படிப்புகளிலும் முதனிலை பெறும் மாணவர்களுக்கு, வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை வங்கியால் 'இலங்கை வங்கி விருது' வழங்கப்படவுள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (15) முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும் இலங்கை வங்கியின் சார்பில் அதன் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் வி. சிவானந்தனும் ஒப்பமிட்டனர்.

வருடாந்தம் தங்கப் பதக்கத்தையும் சான்றிதழையும் வழங்குவதற்கென இலங்கை வங்கியால் ரூபாய் பத்து இலட்சம் இலங்கை வங்கி, திருநெல்வேலி கிளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்பிலிடப்பட்டு, விருதுக்கான வைப்புச் சான்றிதழ் பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

மண் அகழ்வு, மரம் கடத்தல்:

## பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்



■ நடராசா கிருஸ்ணகுமார்

பழையமுறிகண்டி கிராமத்தில் கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்கின்ற மணல் அகழ்வுகளுக்கு அனுமதி வழங்குபவர்கள் யார் என கிராம மக்கள் வினா எழுப்பியுள்ளனர்.

பழையமுறிகண்டியில் மணல் அகழ்வு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம் என்பவற்றில் கடந்த 13 ஆண்டுகளாக முறைப்பாடுகள் செய்தும் மணல் அகழ்வு தடுக்கப்படவில்லை. கிராமத்தை பாராளுமன்ற உறுப்பினர்களும் 13 ஆண்டுகளில் வந்து பார்வையிடவில்லை.

பழையமுறிகண்டி கிராமத்தில் இருந்து புத்துவெட்டுவான், கொக்காவில் வழியாக டிப்பர்களில் மணல் கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கு, புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவில் கொக்காவில் எல்லைப் பகுதியில் பொலிஸ், இராணுவம் இணைந்த காவல் அரண் அமைக்கப்படவில்லை. இவை எல்லாம் புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி கிராமங்களில் இருந்து மணல், மரங்கள் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு வசதியாக உள்ளன.

பழையமுறிகண்டியில் தொடரும் மணல் அகழ்வு காரணமாக, கிராமத்தின் குளத்தின் அணைக்கட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் கிராமத்துக்கு நேரடியாக வருகை தந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடரும் மணல் அகழ்வால் பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான், கொக்காவில் வீதி பெரும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# குத்துச்சண்டை வீரர் மீது கடுமையான தாக்குதல்



■ ஷேன் செனவிரத்ன

கண்டி வைத்தியசாலைக்கு அருகாமையில் இளைஞன் ஒருவர் கடத்தப்பட்டு வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

ஹந்தானை பகுதியிலுள்ள பாழடைந்த இடமொன்றில் வைத்து தாக்கப்பட்டுள்ளதாகவும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

திறமையான குத்துச்சண்டை வீரர் என்ற விருதை பெற்ற இந்த இளைஞனை, கண்டி- வைத்தியசாலை லேனில் உள்ள அவரது வீட்டில் இருந்து ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினர் ஒட்டோவில் கடத்திச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான இளைஞன் ஆபத்தான நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன்,சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### நகர சபையின் சுகாதார பிரிவால்

# மக்களின் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தல்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் சுகாதாரம் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாக ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் உறுப்பினர் அழகமுத்து நந்தகுமார் தெரிவித்தார்.

ஹட்டன் நகரிலுள்ள இறைச்சிக் கடைகள் மிகவும் அழுக்கான நிலையில், சுகாதாரமற்று இருப்பதாகவும் நகரிலுள்ள சில ஹோட்டல்களின் நிலையும் மிகவும் மோசமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

நகரில் நாளுக்கு நாள் கட்டாக்காலிகளின் பெருக்கம் அதிகரித்து வருவதால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் பயத்துடன் பயணம் செய்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வீடுகளிலுள்ள கழிவுகளைச் சேகரிக்க சுத்திகரிப்பு பணியாளர்களால் பணம் வசூலிக்கப்பட்டாலும் உரியமுறையில் கழிவகற்றல் செயற்பாடு இடம்பெறுவதில்லை என்றார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் எவரும் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என தெரிவித்த அவர், இதனால் நகர சபைக்கு வரிப்பணம் செலுத்தும் மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்றும் மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டியது நகர சபையின் சுகாதாரப் பிரிவின் பொறுப்பெனவும் தெரிவித்தார்.

# கித்துல்கல பிரதேசத்தில் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பு



■ என்.ஆராச்சி

சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரோஹன திஸாநாயக்க, கித்துல்கல பிரதேசத்துக்கு அவசர கண்காணிப்பு விஜயம் ஒன்றை நேற்று (15) மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, கித்துல்கல பிரதேசத்தை அண்மித்த களனி கங்கையில் படகு சவாரி விளையாட்டில் ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்தியதுடன், இது தொடர்பில் முறையான திட்டமிடலை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இந்த விளையாட்டில் ஈடுபடுபவர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சியையும் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ப்ரோட்லன் நீர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து களனி ஆற்றுக்கு திறந்து விடப்படும் நீர், படகு சவாரி விளையாட்டுக்கு போதுமானதாக இல்லையென அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# டிஜிட்டல் தராசுக்கு குயினாவில் எதிர்ப்பு

## மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது

■ எஸ். சதீஸ்

பொகவானை-குயினா தோட்டத்தின் இரண்டு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் (14) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்ததுடன், நேற்றும் (15) பணிப்பகிஷ்கரிப்பில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தொழிலாளர்களால் பறிக்கப்படும் கொழுந்து, டிஜிட்டல் தராசால் நிறுவை செய்யப்படுவதாகவும் இதனால் நாளாந்தம் பறிக்கும் தேயிலை கொழுந்தில் நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன் தினமும் ஒவ்வொரு தொழிலாளியும் 18 கிலோ கிராம் பச்சைக் கொழுந்தை பறிக்க வேண்டுமென, தோட்ட நிர்வாகம் வலியுறுத்தி வரும் நிலையில், தாம் 25 தொடக்கம் 30 கிலோ கிராம் கொழுந்தைப் பறிப்பதாகவும் ஆனால், தோட்ட நிர்வாகம் டிஜிட்டல் தராசால் நிறுவை செய்யும் போது, அவை குறைவாக காட்டப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று (15) மூன்றாவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்வதாகவும் இது தொடர்பில் தோட்ட நிர்வாகத்துடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளது என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மலையக அரசியல்வாதிகளுக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

# சிவமலர் யோகேசனுக்கு ‘பாரதியார் விருது’



தனலட்சுமியின் ரோசாக்கூட்டம் இரண்டாம் ஆண்டு விழாவை முன்னிட்டு, நடத்தப்பட்ட இலக்கியவிழாவில் இலங்கையைச் சேர்ந்த ஆசிரியை சிவமலர் யோகேசனுக்கு சிறந்த சிறுகதை எழுத்தாளர் ‘பாரதியார் விருது’ வழங்கப்பட்டுள்ளது. திருச்சி, அருண்மஹால் ஹோட்டலில் டிசெம்பர் 11ஆம் திகதி இந்த விருது வழங்கல் விழா நடைபெற்றது.





# விசேட பூஜை வழிபாடுகள்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பூஜை வழிபாடுகள், இரத்தினபுரி, திருவானக்கட்டை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்றன. இரத்தினபுரி, மாவளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ கே. ரூபகுமார் குருக்கள், திருவானக்கட்டை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ த. ஸ்ரீஹரன் தேசிகர் ஆகியோர் தலைமையில், இப்பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. (சிவாணி ஸ்ரீ)



### கோல்ஃப் மைதானத்தைச் சுற்றி

# மதில் அமைப்பதற்கு பிரதேசவாசிகள் எதிர்ப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா கோல்ஃப் மைதானத்தைச் சுற்றி பாதுகாப்பு மதில் அமைப்பதற்கு எதிராக பிரதேசவாசிகள் நேற்றைய தினம் (15) எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

குறித்த கோல்ஃப் மைதானத்தைச் சுற்றி 8 அடி உயரத்துக்கு மதில் அமைக்கப்பட்டு வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்துள்ள குறித்த கோல்ஃப் மைதானத்தின் அழகு வீதியில் செல் வோரும் காணும் வகையில் அமைந்துள்ள நிலையில், தற்போது அதனை மறைக்கும் வகையில் மதில் கட்டப்பட்டு வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அதிகமாக மழை பெய்யும் காலங்களில் நகரிலுள்ள வடிகானில் செல்லும் நீர் அதிகரித்து தமது வீடுகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையில், கோல்ஃப் மைதான நிர்வாகத்தினரால் மதில் அமைக்கப்படுவதால் மழைக்காலத்தில் தாம் மேலும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா மாநகர சபையினரைத் தெளிவுப்படுத்தும் வகையில் பிரதேசவாசிகளின் கையெழுத்துடனான கடிதம் கையளிக்கப்பட உள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா மாநகர சபையின் நகர ஆணையாளர் சுஜீவ போதிமானவிடம் வினவியபோது, குறித்த மைதானத்துக்கு மத்தியில் தலகல ஓயாவிலிருந்து அடித்து வரப்படும் மண்ணைத் தடுப்பதற்காகவே மதில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், மைதானத்தைச் சுற்றி மதில் அமைக்க எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என்றார்.



### கொட்டகலையில் மாணவர்களை போதையிலிருந்து

# பாதுகாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

■ எஸ்.கணேசன்

> “ பாடசாலைக்குள் போதைப்பொருட்கள் உள்நுழைவதை முற்றாக தடுப்பதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம்

நுவரெலியா மாவட்டத்தில் நகர மற்றும் தோட்டப்பகுதிகளிலுள்ள சில பாடசாலைகளில் போதைப்பொருளுக்கு அடிமையான மாணவர்களை அதிலிருந்து விடுவித்து, நல்வழிப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம், கொட்டகலை வர்த்தக சங்கத்தால் நேற்றுமுன்தினம் (14) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மேற்படி சங்கத்தின் தலைவர் வி. புஷ்பா தெரிவித்தார்.

கொட்டகலை நகரம் மற்றும் அதனை அண்மித்த தோட்டப்பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் சிலர், போதைப்பொருட்களை பாவித்து வருகின்றனர் என சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களால், திம்புள்ள - பத்தனை பொலிஸார் மற்றும் வர்த்தக சங்கத்தினரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மாணவர்களை பாதுகாப்பதற்காக விசேட குழுவொன்றை அமைத்து, அதன் ஊடாக வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.எஸ். டபிள்யூ. விஜேரத்னவால், பொலிஸ் அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் பிரதிநிதிகளுக்கு இது பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருட்களை விநியோகிக்கும் இடங்களை அடையாளம் கண்டு, சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்வதற்கும், போதைக்கு அடிமையான மாணவர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் எஸ்.எஸ்.டபிள்யூ. விஜேரத்ன கூறியுள்ளார்.

பாடசாலைக்குள் போதைப்பொருட்கள் உள்நுழைவதை முற்றாக தடுப்பதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வி சமூகத்தினர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், பாடசாலை மாணவர்கள், இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை - விநியோகத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல் இருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்துமாறும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# ரணிலுக்கு சவாலான 52 நாள்களும் அரசாங்கத்தின் தீவிர முயற்சியும்

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து அபகரித்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு திடீரென வழங்கியதன் ஊடாக நிறைவேற்று, சட்டவாக்கம், நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையில் பெரும் குழப்பகரமான நிலைமை ஏற்பட்டு, அதனை தீர்ப்பதற்கு 52 நாள்கள் எடுத்திருந்தமை சகலரும் அறிந்த விடயமாகும்.

அந்த 52 நாள்களும் அப்போதிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் சவாலான நாள்களாக இருந்தன. இறுதியில் மீண்டும் பிரதமராக ரணில் நியமிக்கப்பட்டார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, பிரதமர் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்ததன் காரணமாகவே, இவ்விருவருக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டு, நீதித்துறை தலையிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதற்கிடையே மற்றுமொரு 52 நாள்கள் சவாலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முகக்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதாவது, தேசிய இனப்பிரச்சினையை நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் (பெப்ரவரி 04) தீர்த்துவைக்க ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

அவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளாத ஒருசில கட்சிகளைத் தவிர, ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் டிசெம்பர் 13ஆம் திகதி ஒன்றுகூடி, தத்தம் தரப்பு கருத்துகளை பகர்ந்துகொண்டனர். முழுமையாக தீர்வு கிடைக்காவிட்டாலும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் இணக்கம் காணமுடியுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏசுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அதிலிருக்கும் அதிகாரங்களை முழுமையாக பகிர்ந்தாலேயே பிரச்சினைக்கு தீர்வை காணமுடியுமென இதர கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் எடுத்துரைத்துள்ளனர். இதற்கிடையே கருத்துரைத்துள்ள உதய கம்மன்பில எம்.பி, 65 வருடகால இனப்பிரச்சினைக்கு 52 நாள்களில் தீர்வு காண முடியாது. அந்த முயற்சி அரசாங்கத்தின் பைத்தியகாரத்தனமானது எனத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒரே மேடையில் அமர்ந்திருந்து பேச்சை ஆரம்பித்திருக்கும் நிலையில், எதிர்மறையான கருத்துரைகளை பரப்பி, அதில் குளிர்காய்ந்து அரசியல் செய்யும் ஒருசிலர் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியை பாராட்ட வேண்டும். பங்கேற்ற ஏனைய கட்சிகளின் தலைவர்கள் இதயசுத்தியுடன் இருக்கவேண்டும். ஆக, எதிர்வரும் 52 நாள்கள் மிகவேகமாகவும் கடினமாகவும் உழைக்கவேண்டும். அதனூடாக ஓரளவுக்கேனும் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிட்டால், மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதை உறுதியாகக் கூறமுடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்துக்கு இந்த 52 நாள்கள் மிகவும் சவால்மிக்கதாகவே இருக்கும் என்பதை நினைவில் கொண்டு செயற்பட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே காலத்தின் தேவையாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எவராவது, யாரோ ஒருவரை உங்கள் முன்னால் திட்டினால், அவ்விடத்தை விட்டு அகலுங்கள். வைதல் இரசனைக்கு உரியதல்ல!

வீட்டுச் சண்டை, தெருச்சண்டை என்பவற்றை, இரசனையுடன் இரசிப்பதும் வக்கிர புத்திதான். காலத்தின் பெறுமதி தெரியாமல் கண்டபடி பொழுதை வீணடிக்கிறார்கள்.

தங்கள் மீது யாராவது சின்னக் குறைகளைச் சொன்னாலேயே ஆத்திரப்படுவார்கள். பிறரை எப்படிக் கேவலமாகப் பேசமுடிகின்றது? ஆணவமிடுக்கு தானாகவே ஆட்சிசெய்கின்றது.

மனித மனம் இரும்பு அல்ல; கடுமையான சொற்பிரயோகத்தை இரசிக்காது. ஆனால், மனிதர்களில் அநேகர், தங்களுக்கு ஒரு நியாயம்; பிறருக்கு ஒரு நியாயமாக நடக்கிறார்கள். தாங்களே மிகச்சிறந்த நியாயவாதி என்றும் கூறுவர்.

துன்பங்கள் வரும்போது பேதலிக்கும் நபர்கள், ஏன் பிறரின் உணர்வைப் புரிந்துகொள்வதேயில்லை.

மானிடர்கள் யாவருக்கும் தாங்கள் ஒரே இனம் என எண்ணுவதுடன், பிறருடைய வலிகளையும் உணரும் திறன் வேண்டும். நியாயம் தப்பி வாழக்கூடாது; அனுசரியுங்கள்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

கௌதாரிமுனை மாணவர்களின்

### போக்குவரத்துக்கு தீர்வு காணுமாறு கோரிக்கை

கிளிநொச்சி, கௌதாரிமுனை பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து பிரச்சினை என்பது, பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக, மிகவும் பின்தங்கிய, வசதி குறைந்த கிராமங்களில் ஆரம்பக்கல்விக்கான பாடசாலை வசதிகள் உள்ளபோதும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கற்பதற்கு வேறு இடங்களையே நாடிச்செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொள்வதுடன் பாடசாலைகளை விட்டு மாணவர்கள் இடைவிலகும் நிலையும் காணப்படுகின்றது. இந்நிலைமை, ஒரு சமூகத்தை மிகவும் ஆபத்தான நிலையை நோக்கித் தள்ளிவிடும்.

எனவே, பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கௌதாரிமுனை கிராமத்திற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால், கற்றல் நடவடிக்கைகளில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். எனவே, சமூகத்தின் எதிர்கால நலன்கருதி, மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

– யது பாஸ்கரன்



வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில்–06:

# ஜேர்மன் சதிமுயற்சியின் அதிர்வலைகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஜேர்மனியில் அரசாங்கத்துக்கு எதிரான சதியில் ஈடுபட்டதற்காக, வலதுசாரி தீவிரவாதிகளை ஜேர்மன் பொலிஸார் கடந்தவாரம் கைது செய்தனர்.

புதன்கிழமை (14) ஜேர்மனியர்களுக்கு ஓர் அதிர்ச்சிகரமான செய்தியோடு விடிந்தது. அச்செய்தி இதுதான்: மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாதுகாப்பு அலுவலர்கள் நாடெங்கும் தேடுதல் வேட்டைகளில் இறங்கி, 25 பேரைக் கைது செய்தனர். இதன்மூலம், அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்கான சதி முறியடிக்கப்பட்டது. இது ஜேர்மனியில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நீண்டகாலமாக அதிவலதுசாரி அபாயம் குறித்துக் கேட்கப்பட்ட போதெல்லாம், ஜேர்மன் பொலிஸாரும் அரசாங்கமும் அவ்வாறு அபாயமில்லை என்பதைத் தொடர்ந்து சொல்லி வந்தார்கள்.

ஆனால், கடந்த ஒரு தசாப்தகாலமாக ஜேர்மனியில் அதிவலதுசாரிகளுக்கான ஆதரவு அதிகரித்து வந்துள்ளது. இந்த நிகழ்வு, மிகப்பெரிய விழிப்புணர்வை மட்டுமன்றி, அதிவலதுசாரிகளின் ஆபத்தையும் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் புரியவைத்துள்ளது.

இந்த விழிப்புணர்வு, ஜேர்மனிக்கு மட்டுமன்றி, முழு ஐரோப்பாவுக்கும் ஓர் எச்சரிக்கையாக உள்ளது. குறிப்பாக, பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளை, முழு ஐரோப்பாவும் இன்று அனுபவிக்கையில், அரசுகள் ஆட்டங்கண்ட நிலையிலேயே உள்ளன.

இந்தச் சதியின் பல்வேறு அம்சங்கள், பல்பரிமாண நெருக்கடிகளைக் கொடுத்துள்ளன. இந்தச் சதித்திட்டத்தின் மொத்தக் கதை, ஓர் உளவு நாவலின் கதையை ஒத்ததாக இருக்கிறது. இந்தச் சதியின் ஓரம்சம் இராணுவத்தினரின் ஆதரவாகும். இன்னோர் அம்சம், அரசாங்கப் பதவிகளில் இருப்பவர்கள் சம்மந்தப்பட்டிருப்பதாகும்.

ஆனால், ஜேர்மனியில் வலதுசாரி தீவிரவாதம் குறித்து ஆய்வு செய்வோர், இந்தச் சதியில் அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர்பதவிகளில் உள்ளவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல என்கிறார்கள்.

அவர்கள், "ஜேர்மன் இராணுவத்துக்குள் இந்த வகையான தீவிர சதித்திட்டங்கள், பல ஆண்டுகளாக இருந்ததை நாங்கள் பார்த்தோம். அவற்றைக் கண்காணிக்கவும் பொறுப்பேற்கவும் வேண்டிய அமைப்புகளும் ஏஜென்சிகளும், அதைச் செய்யத் தவறியதையும் அவர்களுக்கு எதிராகச் செயற்படத் தவறியதையும் நாம் பார்த்திருக்கிறோம். அதன் ஒரு பகுதி நிச்சயமாக, சிக்கலான பிரச்சினைகள் மற்றும் எளிதான விசாரணைகள் அல்ல. தீவிர வலதுசாரிகளுக்கு ஜேர்மனியில் இராணுவம், பொலிஸ் கட்டமைப்புகளின் பல பகுதிகளுக்குள், சில உண்மையான உடந்தைகள் அல்லது சில உண்மையான அனுதாபங்கள் உள்ளன என்ற உணர்வைத் தவிர்ப்பது கடினம். இது, கட்டளைச் சங்கிலியில் எவ்வளவு உயரத்தில் செல்கிறது என்று சொல்வது மிகவும் கடினம். அதாவது, ஜேர்மனியில் இராணுவத்திலும், அரசியல் உயரடுக்குக்கு உள்ளேயும் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் நபர்கள் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இந்தச் சிக்கலை விசாரிப்பதில் இருந்து, அவர்கள் ஆதாரங்களைத் திசை திருப்பியுள்ளனர்" என்று தெரிவிக்கிறார்கள்.

இந்தச் சதி தொடர்பட்டதாகக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெர்லின் நீதிபதி. அவர் தீவிர வலதுசாரி கட்சியின் உறுப்பினர். கடந்தமுறை தேர்தலில் வெற்றிபெற்று, பாராளுமன்றத்தில் இருந்தவர். இம்முறை தேர்தலில் தோல்வியடைந்ததால், தனது முன்னைய பதவிக்குத் திரும்பிவிட்டார்.

அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், குடியேற்றத்துக்கு எதிராகப் பேசினார்; 'நோய்-இறக்குமதி செய்யும் புலம்பெயர்ந்தோர்' என்று தனது பாராளுமன்ற உரைகளில் அகதிகளை முத்திரை குத்தினார். பெர்லின் நகர அரசாங்கத்தின் நீதி அமைச்சர் லீனா கிரெக் (இடதுசாரி கட்சி) அகதிகள் பற்றிய அவரது பெண் வெறுப்பு அறிக்கைகளுக்காக அவரை கட்டாய ஓய்வு பெறவேண்டும் என்று போரிட்டார். ஆனால், மேல் நிர்வாக நீதிமன்றம் நீதிபதிக்கு ஆதரவாக தீர்ப்பளித்தது. மற்றும், பாராளுமன்றத்தில் அவர் கூறிய சில அறிக்கைகள் தீவிரமானதாக இருந்தாலும் அது அவரது நீதிமன்றத் தீர்ப்புகளைப் பாதிக்காது என்றும் அவர் அரசியல் சாய்வோடு இயங்கமாட்டார் என்றும் தெரிவித்தது.

இன்று அதிவலதுசாரி சித்தாந்தத்தை நேரடியாக ஆதரிக்கின்ற பலர், ஜேர்மன் நீதித்துறையில் இருக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தான நிலையை நோக்கி, ஜேர்மனிய நீதித்துறையைக் கொண்டு செல்கிறது என்று ஆய்வாளர்களும் நீதித்துறைசார் நிபுணர்களும் தெரிவிக்கிறார்கள்.

அதிவலதுசாரிகளுக்கான பரந்துபட்ட ஆதரவு, ஜேர்மனியில் எவ்வாறு உருவானது என்ற வினாவை ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. இதற்குக் குறுகியகால, நீண்டகாலக் காரணிகள் இருக்கின்றன.

குறுகிய காலக்காரணியாக 2015-2016ஆம் ஆண்டளவில் சிரிய யுத்தத்தின் விளைவாக, ஜேர்மனியில் அகதிகள் நெருக்கடி ஏற்பட்டது. சிரிய அகதிகளை ஏற்கும் ஜேர்மன் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்காக, மக்கள் ஆதரவு திரட்டப்படவில்லை. இது அதிக எண்ணிக்கையிலான பாதுகாப்புப் படைகளையும், ஜேர்மன் மக்களில் பெரும் பகுதியினரையும் வலதுசாரி தீவிரவாதத்துக்கு அனுதாபம் உள்ளவர்களாக்கியது. ஒருதொகுதி மக்களைத் தீவிர வலதுசாரி சாய்வு நோக்கித் தள்ளியது.

நீண்டகாலக் காரணி யாதெனில், இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து, நேச நாட்டுப் படைகள் ஸ்ராலினிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் எதிராக ஓர் அரண் உருவாக்க ஆர்வமாக இருந்தன. எனவே கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க பல முன்னாள் நாஜிகளுடன் நெருக்கமாக பணியாற்றத் தயாராக இருந்தன.

இதற்கு வசதியாக ஜேர்மனியில் முன்னாள் நாஜிகள் பாதுகாக்கப்பட்டதோடு, அவர்கள் கம்யூனிச எதிர்ப்புக்கான முக்கிய அரணாகவிருந்தனர். அவ்வகையில் ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டாலும் நாஜிகளும் அவர்தம் சித்தாந்தங்களும் தொடர்ந்தும் நிலைபெற அனுமதிக்கப்பட்டன. நாஜிகளுக்கும் அமெரிக்க அரசாங்கத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்தன. இது தனியே விரிவாகப் பேசப்படவேண்டியது.

கடந்த வார நிகழ்வு ஏற்படுத்திய அதிர்ச்சியில் இருந்து, ஜேர்மனியர்கள் இன்னமும் முழுமையாக வெளிவரவில்லை. மக்கள் ஒருபுறம் என்ன நடந்தது? இதன் தீவிரம் என்ன என்பதை அறிய விரும்புகிறார்கள். இன்னொருபுறம் இந்நிகழ்வைக் கடந்து செல்ல முயலுகிறார்கள். ஆனால் பழைமைவாதிகளில் பெரும்பாலானோர் இந்த நிகழ்வை முக்கியமற்றதாகக் கருதுகிறார்கள்.

அதேவேளை, தீவிர வலதுசாரி தேசியவாதிகள், இந்நிகழ்வைத் 'திட்டமிட்ட நாடகம்' என்று வர்ணிக்கிறார்கள். ஜேர்மனியில் சிரிய அகதி ஒருவன், ஜேர்மனியக் குழந்தையைக் குத்திக் கொலைசெய்த நிகழ்வின் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்காக, இந்த நாடகத்தை அரங்கேற்றியதாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள். இதையும் கணிசமானளவு மக்கள் நம்புகிறார்கள்.

இந்த நிகழ்வு, அரசாங்கத்தின் தரப்பில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வளவு காலமும் அசண்டையீனமாக இருந்த ஜேர்மனிய அரசாங்கம், இறுதியாக விழித்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது. அதாவது, இந்தப் பிரச்சினைகளைப் பற்றி மிகுந்த அக்கறை கொண்ட தனிப்பட்ட அரங்காடிகள், இதற்கு முன்பு அரசாங்கத்தில் இருந்தனர். ஆனால், அரசாங்க உயரடுக்கு அவர்களின் குரல்களை செவிமடுக்கவில்லை.

இன்று ஜேர்மனிய அரசாங்கத்துக்கு இருக்கின்ற முக்கியமான பிரச்சினை, இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளில் ஆழமாகச் செல்வாக்குச் செலுத்துகின்ற அதிவலதுசாரி தீவிரவாதம் ஆகும்.

இந்தச் சதி, அதிகளவில் அரச அதிகாரிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இப்போதுதான் ஜேர்மனியின் உள்நாட்டு புலனாய்வு சேவையின் தலைவர், இந்த இயக்கம் கடந்த ஆண்டில் வளர்ந்துள்ளது என்றும் 'உயர் மட்ட ஆபத்தை' கொண்டுள்ளது என்றும் பொதுவெளியில் ஒத்துக் கொண்டுள்ளார்.

இந்த அதிவலது இயக்கத்தின் மிகவும் ஆபத்தான கூறுகளில் ஒன்று என்னவென்றால், அவர்கள் மொட்டையடித்த தலைகள், கறுப்பு காலணிகளுடன் வெளியே செல்லும் கோபமான இளைஞர்கள் அல்ல. வழமையான நவ-நாஜி அணிவகுத்துத் செல்பவர்கள் அல்ல. அடையாளங்களுடனும் சின்னங்களுடனும் தம்மை வெளிப்படையாகக் காட்டிக் கொண்பவர்கள் அல்ல.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள்; அவர்கள் மரியாதைக்குரியவர்கள்; நடுத்தரக் குடிமக்கள். இது, இந்த இயக்கத்தை ஓரளவு கண்ணுக்கு தெரியாததாக ஆக்குகிறது. எனவே அவர்கள் 1990களில் நவநாஜிக்கள் என்று மக்கள் கருதியவற்றிலிருந்து மிகவும் சமூக ரீதியாக வேறுபட்ட இயக்கமாக உருவாகிவிட்டனர்.

2017ஆம் ஆண்டு, அமெரிக்காவில் தோற்றம் பெற்றுப் புகழ்பெற்ற QAnon என்கிற சதிக்கோட்பாட்டையுடைய அரசியல் இயக்கத்தின் செல்வாக்கு, ஜேர்மனியில் அதிகரித்துள்ளது. QAnon ஆதரவாளர்களில் ஒன்லைனில் இரண்டாவது பெரிய சமூகமாக ஜெர்மனி உள்ளது.

எனவே, டெலிகிராம் மற்றும் பிற சமூக ஊடகங்களில் QAnon சேனல்களுக்கு சந்தா செலுத்தும் நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, ஜெர்மனி அந்த வகையில் மிகவும் செழிப்பாக உள்ளது. இது பலருக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இவையனைத்தும் ஒரே திசையை நோக்கியே சுட்டுகின்றன. பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துகின்ற சமூக நெருக்கடி தவிர்க்கவியலாதபடி தீவிரவாத நிலைப்பாடுகளை நோக்கி மக்களை நகர்த்துகின்றன. இதன் முதற்படியே ஜேர்மனியில் அரங்கேறுவது ஆகும்.



# ‘வஷொகு’ உணவு தயாரிப்பு முறை பற்றிய விளக்கமளிப்பு

வஷொகு ‘Washoku’ என்பது பாரம்பரிய ஜப்பானிய உணவாக இருப்பதுடன், ஜப்பானிய கலாசாரத்தின் உள்ளம்சமாக அமைந்துள்ளது. இந்த உணவில் சோறு குவளையுடன் பக்க உணவு வகைகள் தயாரிக்கப்பட்டிருக்கும். இது ஒருமைப்பாட்டைக் குறிக்கின்றது. எனவே, ஒவ்வோர் உப உணவு வகைகளும் ஒன்றுடன் இணைந்திருப்பது முக்கியமானதுடன், சுவைகளிடையே சிறந்த சமநிலையை தோற்றுவிக்கும். மக்கள் உணவை சுவைத்துப் பாராட்டுவதற்கு உதவுவது மாத்திரமன்றி, உணவு வகைகளுடன் உயர்ந்த மட்ட ஈடுபாட்டையும் ஏற்படுத்துகின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனத்துடன் இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் இணைந்து, ‘வஷொகு’ உணவு வகைகளை தயாரிப்பது பற்றிய விளக்கங்களை முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வு 2022 நவம்பர் 28 ஆம் திகதி இடம்பெற்றது. கராகே (வறுத்த சிக்கன்), சிக்கன் நன்பன் (சிக்கனுடன் வினாகிரி மற்றும் டார்டர் சோஸ்) மற்றும் சிக்கன் டெரியாக்கி (சுவீட் சோய் சோஸ் பூசப்பட்ட சிக்கன்) போன்றன தயாரிக்கப்பட்டிருந்தன.

இளைஞர் சேவைகள் சம்மேளனத்தில் உணவு தயாரிப்பு கற்கைகளை தொடரும் மாணவர்களும், விரிவுரையாளர்களும் மற்றும் தலைவர்களும் இந்த விளக்கமளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுவைகளுக்கிடையே ஒருமைப்பாடு மற்றும் சமநிலை என்பதை அடிப்படையாகக் கொண்டு ‘வஷொகு’ அமைந்திருப்பதால், இலங்கை மற்றும் ஜப்பானிடையே 70 வருடங்களாகத் தொடரும் நட்புறவில் காணப்படும் பிரதான பெறுமதிகள் இந்நிகழ்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

125 வருட பூர்த்தியை

# கோலாகலமாக கொண்டாடியது பவர்

இலங்கையின் பரந்தளவு தொழிற்றுறைகளின் மத்தியில் முன்னேற்றகரமான புத்தாக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் 125 வருடகால வரலாற்றுப் பூர்த்தியை கொண்டாடும் வகையில், பவர் என அழைக்கப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், மாபெரும் மாலை நேர விருந்துக் கொண்டாட்ட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. தனது நீண்ட வரலாற்றுப் பயணத்தை மீட்டுப் பார்த்ததுடன், கடந்து வந்த சவால்கள் நிறைந்த பயணங்கள், தசாப்த காலங்களில் உறுதியாக காண்பித்திருந்த அர்ப்பணிப்புகளுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள திட்டங்களை இந்த நிகழ்வில் வெளிப்படுத்தியிருந்தது.

2022 நவம்பர் 30 ஆம் திகதி, சினமன் லேக்சைட் ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற்றதுடன், நாட்டின் புகழ்பெற்ற பிரபலங்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்லாசர் கருத்துத் தெரிவிக்கையில், “எமது சாதனைகள் தொடர்பிலும், பல தசாப்த காலங்கள் எதிர்கொண்டிருந்த சவால்களுக்கு மத்தியில் உரிய காலப்பகுதியில் முன்னெடுத்திருந்த புத்தாக்கமான தீர்வுகள் தொடர்பிலும் நாம் பெருமை கொள்கின்றோம். இதில் பங்காற்றியிருந்த எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்கள், பங்காளர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவிக்கின்றேன்” என்றார்.

ஸ்தாபிக்கப்பட்டது முதல் நிறுவனத்தால் எய்தப்பட்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகள் தொடர்பில் ப்லாசர் விளக்கமளித்திருந்ததுடன், நிறுவனத்தின் ஸ்தாபகரான அல்பிரட் பவர், சேதன மற்றும் இரசாயன உரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தமை, விவசாயிகளுக்கு விஞ்ஞானபூர்வமான ஆலோசனைகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை பற்றிய விளக்கங்களையும் வழங்கியிருந்தார். பிராந்தியத்தில் காணப்படும் உயர் தொழில்நுட்பத்திறன் வாய்ந்த உரத் தொழிற்சாலையாக இது திகழ்கின்றது எனக்குறிப்பிடலாம்.




ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க காணப்படுகின்றார். ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட்டின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொல்ஃவ் ப்லாசர் இடதுபக்க அருகில் காணப்படுகின்றார்.

பல செயற்றிட்டங்களின் முன்னோடியாக பவர் திகழ்ந்தமை இந்த விளக்கத்தினூடாக அறிந்து கொள்ள முடிந்தது. இதில், 1901 ஆம் ஆண்டில் துறைமுகத்தையும் பெருந்தோட்டப் பகுதியையும் இணைக்கும் தொழிற்றுறைசார் ரயில்பாதை வலையமைப்பு முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை, 1919 ஆம் ஆண்டில் ஹென்ரி ஃபோர்ட் விவசாய டிராக்டரை அறிமுகம் செய்திருந்தமை, 1936 ஆம் ஆண்டில் முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் தேயிலைத் தொழிற்சாலையை நிறுவியிருந்தமை,

தொடர்ந்து, 1968 ஆம் ஆண்டு பொலன்னறுவை பெருந்தோட்டத்தில் நெல் அறுவடை இயந்திரத்தை இயக்கியிருந்தமை, 1975 ஆம் ஆண்டில் நாட்டில் பாஸ்மதி அரிசி செய்கையை மேற்கொண்டமை, சேனைப் புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு 2020 ஆம் ஆண்டில் உயிரியல் கிருமிநாசினியை முதன் முதலில் அறிமுகம் செய்திருந்தமை வரையான விளக்கங்களும் வழங்கப்பட்டிருந்தன.

ஏனைய துறைகளில் பவரின் பிரவேசம் தொடர்பிலும் ப்லாசர் விளக்கமளித்திருந்தார். 1945 ஆம் ஆண்டில் மலேரியா தாக்கம் உச்ச கட்டத்தில் காணப்பட்ட போது, சுகாதாரப் பராமரிப்புத் துறையில் பிரவேசம், 1957 ஆம் ஆண்டில் சுவிஸ்எயாருக்கான GSA ஆக ஆகாயத்துறையில் பிரவேசம், 2021 ஆம் ஆண்டில் உலகின் முன்னணி Ecole htelire de Lausanne இனால் சுவிஸ் நாட்டு மாதிரியை அறிமுகம் செய்து விருந்தோம்பல் துறையில் பிரவேசம் போன்றன தொடர்பில் விளக்கமளித்திருந்தார்.

1982 ஆம் ஆண்டில் IBM உடன் இணைந்து டிஜிட்டல் மாற்றத்துறையில் நீண்ட தூரம் பவர் பயணித்துள்ளது. 1991 ஆம் ஆண்டில் HSBC இன் முதலாவது e-வங்கியியல் வாடிக்கையாளராகவும் இணைந்து கொண்டது. கடந்த ஆண்டில் நிறுவனம் SAP S/4HANA ஐ முதன் முறையாக மெருகேற்றம் செய்திருந்தது. இன்றைய காலகட்டத்தில் நிறுவனத்தின் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு என்பது தொழிற்துறையில் காணப்படும் சிறந்த தரமாக அமைந்துள்ளதுடன், சைபர் பாதுகாப்பு, இடர் மீட்சி, விற்பனை செயலணி தன்னியக்கமயமாக்கல், இயந்திர பயிலல், artificial intelligence மற்றும் IoT போன்றவற்றை இணைத்து செயலாற்றுகின்றது.

சேலம்

# உதயநிதி விவகாரம்; ஜெயக்குமாருக்கு விஷால் பதிலடி

தமிழகத்தின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (14) பதவியேற்றார்.

இந்நிலையில் நடிகர் விஷாலின் ரசிகர் நற்பணி மன்றம் சார்பாக, ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, சேலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட விஷாலிடம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், உதயநிதி அமைச்சரானால் திரைப்படங்களில் நடிக்கக் கூடாது எனத் தெரிவித்திருந்தார். இதற்கு உங்கள் கருத்து என்ன? என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த விஷால், ‘முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மேடைகளில் பாடியுள்ளார்.



அது சினிமா பாடல்கள் தானே! ஒவ்வொரு துறையிலும் பயணிப்பதா இல்லையா என்பது அவரவர் எடுக்க வேண்டிய முடிவுகள். அத்துடன் உதயநிதி ஸ்டாலினை அமைச்சராகப் பார்க்க வேண்டும் என்பது எனது 9 வருட கனவு. அது தற்போது நனவாகியுள்ளது.

அத்துடன் வாரிசு அரசியல் என்ற விமர்சனம், என்பது மேலோட்டமாகத் தெரியுமே தவிர, இப்பதவிக்கு உதயநிதி தகுந்த அமைச்சராக இருப்பார் எனத் தெரிந்தே முதலமைச்சர் ஸ்டாலின் அப் பதவியைக் கொடுத்திருப்பார்.

உதயநிதிக்கு அமைச்சராக அனைத்துத் தகுதிகளும் உள்ளன என நானும் நம்புகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.



பெங்களூர்

# பெண்ணின் உயிரைப் பறித்த கருத்தடை மாத்திரை

பெங்களூரில் கருத்தடை மாத்திரையை உட்கொண்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பெங்களூரில் வசித்து வருபவர் தேபபிராத். இவருக்கு பிரீத்தி என்ற மனைவி உள்ளார். இத்தம்பதிக்கு ஒரு வயதில் குழந்தை உள்ளது.

இந்நிலையில் அண்மையில் மீண்டும் கர்ப்பம் தரித்த பிரீத்தி, குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பாததால் கருவை கலைக்க முடிவு செய்தார். இதுகுறித்து தனது கணவர் தேபபிராத்திடம் கூறிய போது, அவர் வைத்தியரின் ஆலோசனை பெற்று கருவை கலைக்கும்படி தெரிவித்துள்ளார்.

எனினும் இதைக் கண்டுகொள்ளதாத பிரீத்தி, கருவைக் கலைக்க கருக்கலைப்பு மாத்திரையை உட்கொண்டுள்ளார்.

இதனால் அவருக்கு கடும் இரத்தப்போக்கு ஏற்பட்ட நிலையில் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக பிரீத்தியை, கணவர் வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்ற நிலையில், அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் கருக்கலைப்பு மாத்திரையை உட்கொண்டதால் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டே அவர் உயிரிழந்துள்ளார் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எலி மருந்துக்கு நிரந்தர தடை



தமிழக த்தில் நாளுக்கு நாள் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் இதனை தடுக்கும் விதமாக பூச்சி மருந்து மற்றும் எலி மருந்துகள் விற்பனையைத் தடை செய்ய வேண்டும் எனப் பலரும் அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் மூன்று சதவீதம் மஞ்சள் பொஸ்பரஸ் உள்ள எலி மருந்து பேஸ்ட் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை விதிக்கப்படுவதாக அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மேலும் இதனை ஒன்லைனிலும் விற்பனை செய்யக்கூடாது எனவும் மீறினால், கடுமையான தண்டனை வழங்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதே சமயம் அண்மையில் தற்கொலைகளை தடுக்கும் விதத்தில் அபாயகரமான ஆறு பூச்சி கொல்லி மருந்துகளை விற்பனை செய்ய தமிழக அரசு தடை விதித்து அரசாணை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உத்தரப் பிரதேசம்

# தாயின் சடலத்துடன் 4 நாள்கள்



உத்தரப்பிரதேசம், கோரக்பூரைச் சேர்ந்தவர் சாந்தி தேவி. 82 வயதான இவர் ஓய்வு பெற்ற ஆசிரியராவார்.

இவருக்கு நிகல் ( 45) என்ற மனநலம் பாதிக்கப்பட்ட மகன் ஒருவர் உள்ளார். அவரது 2 பிள்ளைகளும் புதுடெல்லியில் படித்து வருகின்றனர். அத்துடன் நிகில் உடல்நலம் பாதிக்கப்பட்ட தனது தாயுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் சாந்தி தேவியின் வீட்டில் இருந்து கடந்த 13 ஆம் திகதி துர்நாற்றம் வீசியதால் சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், படுக்கை அறையிலுள்ள கட்டிலின் அடியில் இருந்து சாந்தி தேவியின் சடலத்தை மீட்டனர்.

மேலும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தனது தாய் 4 நாள்களுக்கு முன்னர் உடல் நலக்குறைவால் இறந்துவிட்டார் எனவும், என்னசெய்வது எனத் தெரியாமல் தாயின் உடலை கட்டிலுக்கு அடியில் வைத்து விட்டு 4 நாள்களாக வீட்டிலேயே இருந்ததாகவும், துர்நாற்றம் வீசும்போது ஊதுவர்த்தி கொளுத்தி வைத்திருந்ததாகவும் நிகில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மனநலம் பாதிக்கப்பட்ட நிகில் போதைக்கு அடிமையானவர் என்றும் அடிக்கடி அவர் தாயை தாக்கி வந்தார் எனவும், நிகிலின் செயல்களால் மனஉளைச்சலுக்கு ஆளான அவரது மனைவி கடந்த 15 நாள்களுக்கு முன்னர் தனது தாயின் வீட்டிற்குச் சென்றுவிட்டார் எனவும் அக்கம்பக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

ஈரோடு

# தகன வாகன நடமாடும் சேவை



தமிழகத்தில் முதல் முறையாக, ‘தகன நடமாடும் வாகனம்’ அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு, கருங்கல்பாளையம், காவிரி கரையில் உள்ள ஆத்மா மின் மயானத்திலேயே குறித்த தகன நடமாடும் வாகனம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் எரியூட்டுவதற்கு விறகு அல்லது சாண வரட்டிகளை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு இந்திய மதிப்பில் 15,000 ரூபாய் வரை செலவாகின்றது. அத்துடன் அவ்வாறு தகனம் செய்வதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன் தகனம் செய்ய சுமார் 8 மணி நேரம் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டே தகன நடமாடும் வாகன சேவை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்நடமாடும் தகன வாகனம் மூலம், உடலை ஒரு மணி நேரத்தில் எரியூட்டி, இறந்தவரின் குடும்பத்திற்கு அஸ்தியை வழங்க முடியும் என ‘ஆத்மா’ நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வாகனம், ஆத்மாவின் அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி அனுப்பி வைக்கப்படும் என்றும், முற்று முழுதாக எரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்தியே தகனம் செய்யப்படும் என்றும், மாநகராட்சிக்கு வெளியே குடியிருப்பு பகுதி இல்லாத கிராம மயானம் மற்றும் விவசாய நிலத்தில் மாத்திரமே எரியூட்டப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.



உலகக் கிண்ணம்:

# மொரோக்கோவை வென்று இறுதி போட்டியில் பிரான்ஸ்

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியனான பிரான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற மொரோக்கோவுடனான அரையிறுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு பிரான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

பிரான்ஸின் முன்கள வீரரான அந்தோனி கிறீஸ்மன் வழங்கிய பந்தை சக முன்கள வீரரான கிலியான் மப்பே கோல் கம்பத்தை நோக்கிச் செலுத்துகையில் அது தடுக்கப்பட்டு மீண்டும் வருகையில் பின்களவீரரான தியோ ஹெர்ணாண்டஸ் அதைக் கோலாக்க போட்டியின் ஐந்தாவது நிமிடத்திலேயே பிரான்ஸ் முன்னிலை பெற்றது.

இப்போட்டிக்கான அணி அறிவிக்கப்பட்டு போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் உபாதையால் முன்னணி பின்களவீரரை இழந்த மொரோக்கோ போட்டியின் 20ஆவது நிமிடத்தில் அணித்தலைவரையும், பின்னர் முதற்பாதியுடன் இன்னொரு பின்களவீரரையும் உபாதையால் இழந்திருந்தது.

இந்நிலையில், போட்டியின் முதற்பாதி முடிவில் மொரோக்கோவின் பின்கள வீரரொருவரால் தலைக்கு மேலால் கோல் கம்பத்தை நோக்கி செலுத்தப்பட்ட பந்தானது கோல் கம்பம், பிரான்ஸின் கோல் காப்பாளர் ஹியூகோ லோரிஸால் தடுக்கப்பட்ட நிலையில் உட்சென்றிருக்கவில்லை.

பின்னர் போட்டியின் 79ஆவது நிமிடத்தில் மப்பேயால் கோல் கம்பத்தை நோக்கிச் செலுத்தப்பட்ட பந்தானது தடுக்கப்பட்ட நிலையில், அதை மாற்றுவீரராகக் களமிறங்கிய கோலா முலானி கோலாக்க்கியதோடு 2-0 என்ற கோல் கணக்கில் இறுதியில் பிரான்ஸ் வென்றது.

தெற்காசிய போட்டியில்

## 8 பதக்கங்களை வென்றார் துரைசாமி விஜிந்த்



நிலமேகம் பிரசாந்த்

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய பூண்டுலோயாவை சேர்ந்த துரைசாமி எட்டு பதக்கங்களை வெற்றியீட்டுள்ளார்.

இலங்கை, இந்தியா, பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய ஐந்து நாடுகள் பங்குபற்றிய இப்போட்டி மும்பை மற்றும் உடுப்பி எனும் இரு வேறு இடங்களில் இடம்பெற்றது.

இதில் மும்பையில் கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை இடம்பெற்ற போட்டியில் குண்டு எறிதல், சுற்றியெறிதல் ஆகிய போட்டியில் இரு தங்கப் பதக்கங்களையும், பரிதி வட்டம் எறிதல், வேகநடை ஆகியற்றில் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

**“ குண்டு எறிதல், சுற்றியெறிதல், பரிதி வட்டம் எறிதல், வேகநடை போன்றவற்றில் மொத்தமாக எட்டு பதக்கங்கள்**

அதேபோல கர்நாடகா உடுப்பியில் இம்மாதம் 8 முதல் 10 வரை இடம்பெற்ற போட்டியில் சுற்றியெறிதல் ,பரிதிவட்டம் எறிதலில் இரண்டு தங்கப் பதக்கங்களையும், 4x400 ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், குண்டெறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வெற்றியீட்டி மொத்தமாக எட்டு பதக்கங்களை வெற்றியீட்டி தற்போது நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்:

## தம்புள்ள ஓறாவை வீழ்த்திய கொழும்பு ஸ்டார்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தம்புள்ள ஓறாவுடனான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டார்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஓறா, கசுன் ராஜித (5), சுரங்க லக்மால், ஜெஃப்ரி வன்டர்சே (2), கரிம் ஜனட்டிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 13.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 90 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், சரித் அஸலங்கவின் ஆட்டமிழக்காத 58 (36), தினேஷ் சந்திமாலின் ஆட்டமிழக்காத 31 (32) ஓட்டங்களோடு 11.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், பிரமோத் மதுஷன் 2-1-3-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக ராஜித தெரிவானார்.

இதேவேளை, முன்னதாக நடைபெற்ற ஜஃப்னா கிங்ஸுடனான போட்டியில் கண்டி பல்கொன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கண்டி பல்கொன்ஸ்

கண்டி பல்கொன்ஸ்: 160/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பேபியன் அலென் 47 (23), அன்ட்ரே பிளட்சர் 35 (22), அஷேன் பண்டார 24 (24), சாமிக கருணாரத்ன ஆ.இ 18 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: டுனித் வெல்லலாகே 2/7 [4], ஜேம்ஸ் புல்லர் 2/28 [4])

ஜஃப்னா கிங்ஸ்: 150/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சதீர சமரவிக்கிரம 48 (41), அவிஷ்க பெர்ணாண்டோ 33 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: கார்லோஸ் பிறத்வெய்ட் 4/18 [4], வனிடு ஹஸரங்க 2/21 [4], பேபியன் அலென் 1/22 [4], இசுரு உதான 1/27 [4])

போட்டியின் நாயகன்: பேபியன் அலென்

ஜேர்மனி

# 30,000 குழந்தைகளை உருவாக்கும் கருப்பை




இன்றைய உலகில் தம்பதிகளின் கருத்தரிப்பு சதவீமானது குறைவடைந்து கொண்டு செல்வதால், குழந்தைகளைக் பெற்றுக்கொள்ள தம்பதியினர் வாடகை தாய், செயற்கை கருவூட்டல் உள்ளிட்ட பல்வேறு மாற்று வழிகளைத் தேடி வருகின்றனர்.

இந்நிலையில் செயற்கை கருத்தரிப்பின் அடுத்த கட்டமாக ஜேர்மனியின் தலைநகரா பெர்லினியில் செயற்பட்டு வரும் ‘EctoLife‘ எனும் நிறுவனம் உலகின் முதல் செயற்கை கருப்பை முறையில் குழந்தையை உருவாக்கி வளர்க்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

தாயின் கருவறை போலவே செயற்கையாக உருவாக்கப்படும் இக்கருப்பை வசதி மூலம், ஒரு வருடத்திற்கு சுமார் 30,000 குழந்தைகளை உருவாக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் மூலம் மலட்டுத்தன்மையுள்ள பெற்றோருக்கு குழந்தைகள் கருத்தரிக்கவும், உண்மையான உயிரியல் பெற்றோராக அவர்களை மாற்றவும் முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது புற்றுநோய் மற்றும் பிற சிக்கல்களால் கருப்பையை இழக்கும் பெண்களுக்கு ஒரு தீர்வாக இது அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழில் நுட்பத்தின் மூலம் வளரும் கருவிற்கு செயற்கை தொப்புள்கொடி மூலம் செறிவூட்டப்பட்ட சத்துக்களை அனுப்ப முடியும் எனவும், அதேபோல் குழந்தையின் கழிவுகளும் உரிய விதத்தில் அகற்றப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறையானது மக்கள் தொகை சரிவால் கவலையுறும் ஜப்பான், பல்கேரியா மற்றும் தென் கொரியா நாடுகளுக்கு பெரிதும் உதவியாக அமையும் எனவும், இதன் மூலம் வருடத்திற்கு சுமார் 30,000 கருக்களை வளர்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## உடற்பயிற்சி செய்தால் அது இலவசம்

ருமேனியாவில் குறிப்பிட்ட உடற்பயிற்சியைச் செய்து முடிப்போருக்கு இலவசமாக பஸ் டிக்கெட் வழங்கப்பட்டு வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான இணையத்தில் வெளியான வீடியோவொன்றும் தற்போது வைரலாகி வருகின்றது.

குறித்த வீடியோவில் ”ஒரு பெண்மணி இயந்திரத்தின் முன்பாக நின்று 20 முறை ஸ்குவாட் எனப்படும் உடற்பயிற்சியை செய்வதையும், இவ் உடற்பயிற்சியை அப்பெண் செய்து முடித்தவுடன் குறித்த இயந்திரம் இலவச பஸ் டிக்கெட் ஒன்றை வழங்குவதையும் காணலாம்.

இந்நிலையில் பொது மக்களை ஆரோக்கியத்துடன் வைப்பதற்காகவே ருமேனியாவில் இம்முறை பின்பற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## FIFA உலகக் கோப்பை; பொலிஸாரைத் தாக்கிய ரசிகர்கள்

காற்பந்து ரசிகர்களின் அபிமானத்தை வென்ற FIFA 2022 உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமாகி விறு விறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற அரை இறுதி போட்டியில் பிரான்ஸ் அணியிடம் மொராக்கோ அணி தோல்வியை தழுவியது.

இதனால் அந்நாட்டு ரசிகர்கள் கவலையில் ஆழ்ந்தனர். இத்தோல்வியை ஜீரணிக்க முடியாத மொராக்கோ ரசிகர்கள் பிரான்ஸ் மற்றும் பெல்ஜியத்தில் வன்முறையில் ஈடுபட்டனர்.

குறிப்பாக பிரான்சில் பொலிஸார் மீது கற்களை வீசியும், பெல்ஜியத்தில் பொலிஸார் மீது பட்டாசுகளைக் கொளுத்தி வீசியும், வாகனங்களுக்கு தீ வைத்தும் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பதட்டமான சூழ்நிலை நிலவியது. இதனையடுத்து குறித்த பகுதிகளில் கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## நிலவுக்கு அனுப்பப்பட்ட ‘ஓரியன்’ தரையிறங்கியது



ஓரியன் விண்கலம் பாதுகாப்பான முறையில் தரையிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா, பல ரொக்கெட்டுகளை தயாரித்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. அதேபோல் மனிதனை நிலவுக்கு வருகின்ற 2025-ஆம் ஆண்டுக்குள் அனுப்ப வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.


இதற்காக ஆளில்லா ஓரியன் வெண்கலத்தை நிலவுக்கு அனுப்ப திட்டமிட்டது. ஆனால் திடீரென ரொக்கெட்டில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அந்த முயற்சி பலமுறை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் பல தடைகளுக்கு பின்னர் கடந்த சில நாட்களுக்கு முன்பு ரொக்கெட் மூலம் ஓரியன் விண்கலத்தை வெற்றிகரமாக நிலவுக்கு அனுப்பியது.

இந்த விண்கலம் சுமார் 26 நாட்கள் நிலவின் சுற்றுவட்ட பாதையில் சுற்றி தனது பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் பசுபிக் பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பாக தரையிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து

## அறியாமலே நடுவானில் பிறந்த குழந்தை



பெண்ணொருவர் தான் கர்ப்பமாக இருப்பதை அறியாமலே நடுவானில் வைத்து குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

ஈகுவடோர் நாட்டின் குவாயாகில் நகரில் இருந்து நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாம் நோக்கி பயணித்த விமானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த விமானத்தில் தமாரா என்ற பெண் பயணம் செய்துள்ளார். இந்நிலையில் விமானம் ஆம்ஸ்டர்டாம் நகரை நெருங்கி கொண்டிருந்தபோது தமாராவுக்கு வயிற்று வலி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அருகில் இருந்த பெண், விமானத்தின் கழிவறைக்கு தமாராவை அழைத்துச் சென்றுள்ளார். இதன்போது அவ்விமானத்தில் பயணம் செய்த 2 வைத்தியர்கள், ஒரு செவிலியர் உதவிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது தமாராவுக்கு பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது. தான் கர்ப்பமானதையே அறியாமல் குழந்தை பெற்றெடுத்ததை எண்ணி தமாரா ஆச்சரியத்தில் உறைந்து போயுள்ளார்.

இதையடுத்து விமானம் ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள விமான நிலையத்தில் தரையிறங்கியதும் அங்கு தயார் நிலையில் இருந்த மருத்துவ ஊழியர்கள் தமாரா மற்றும் அவரது குழந்தையை வைத்தியசாலைக்கு அழைத்து சென்றனர்.

தாயும், சேயும் நலமாக இருப்பதாக டொக்டர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கா

## உலகின் பழைமையான ஜீன்ஸ்



1985 -ஆம் வருடம் பனாமாவிலிருந்து நியூயார்க்கை நோக்கி தங்ககப்பல் என அழைக்கப்பட்ட எஸ். எஸ் மத்திய அமெரிக்க கப்பல் 425 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தபோது புயலில் சிக்கி வடக்கு கரோலினா பகுதியில் நீரில் மூழ்கியுள்ளது.

இக் கப்பலில் மெக்சிகோ அமெரிக்க போரில் ஓரிகானை சேர்ந்த ஜான் டிமெண்ட் என்பவருக்கு சொந்தமான டிரங்கு ஒன்றிலிருந்து சமீபத்தில் உலகின் மிகப் பழமையான ஜீன்ஸ் ஜோடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜீன்ஸ் ஜோடி ஆரம்ப காலத்தில் ஜோடி பேண்ட் லெவிஸ் ஸ்ட்ராஸ் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மூழ்கிய கப்பலில் இருந்து மீட்கப்பட்ட சுரங்க தொழிலாளியின் ஜீன்ஸ் பேண்ட் கடந்த வாரம் சுமார் 114,000 அமெரிக்க டொலருக்கு நெவாடாவில் உள்ள ரெனோவில் விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 16 டிசெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.